மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம்

முன்னிலை – திரு. R. பாக்யராஜ், எம்.ஏ., பி.எல்.,

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம். வந்தவாசி(FAC),

திருவண்ணாமலை மாவட்டம்.

2025–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20–ம் நாள் வியாழக்கிழமை

அசல் வழக்கு எண்.31/2016– ல் இடைக்கால மனு எண். 02/2023

குணசேகரன் .... மனுதாரர்/வாதி

/எதிர் /

1. சுசீலா,
2. வரதராஜன்,
3. ஜெயசித்ரா,
4. லட்சுமி,
5. வட்டாட்சியர், வந்தவாசி,
6. கிராம நிர்வாக அலுவலர்,
   ஆராசூர்,
7. சார் பதிவாளர்,

வந்தவாசி, ....எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

8. சுந்தர்,
9. ஞானமுருகன் ..... உத்தேச எதிர்மனுதாரர்கள்

இம்மனு 13.02.025 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் /வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. இரா. மணி, அவர்களும், 1, 2, 4, 5 முதல் 7 மற்றும் 9 எதிர்மனுதாரர்கள் ஒருதலைப்பட்ச உத்தரவிற்கு உட்படுத்தப்பட்டும், 3 மற்றும் 8 ஆம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. கோகுலகிருஷ்ணன் அவர்களும் முன்னிலையாகி இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

இந்த மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கட்டளை 1 விதி 10(2) கீழ் தாக்கல் செய்யப்பட்டு, 8 மற்றும் 9 உத்தேச எதிர்மனுதாரர்களை

அசல் வழக்கில், பிரதிவாதிகளாக சேர்க்க அனுமதிக்கக்கோரி மனுதாரர்/வாதியால் கோரப்பட்டுள்ளது.

2. மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் –

மனுதாரர் அசல் வழக்கின் வாதி ஆவார். மனுதாரர்/வாதியால் மேற்படி அசல் வழக்கில் 8, 9 உத்தேச எதிர்மனுதாரர்களை பிரதிவாதிகளாக சேர்க்க அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 3–ஆம் பிரதிவாதியால் கடந்த 18.04.2023 –ம் தேதியன்று தாவா 7, 8 அயிட்ட சொத்துக்கள் மனுதாரரின் கணவரான 8–ஆம் உத்தேச எதிர்மனுதாரருக்கு மோசடியாகவும், போலியாகவும் ஒரு பெயரளவு தான ஒப்படைவு ஆவணம் எழுதி பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட 18.04.2023 தேதியிட்ட மோசடியான தான ஒப்படைவு ஆவணத்தின் அடிப்படையில் 8–ஆம் உத்தேச எதிர்மனுதாரரால் 9–ஆம் உத்தேச எதிர்மனுதாரருக்கு கடந்த 26.04.2023 ஆம் தேதி ஒரு விற்பனை ஆவணமும் எழுதி பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் 8 மற்றும் 9–ஆம் உத்தேச எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தில் தப்புரிமை பாராட்டவும், தாவா சொத்தில் வாதியின் அனுபவத்தை தடை செய்யவும் வருவாய் துறை ஆவணங்களில் எதிர்மனுதாரர்களின் பெயரை சேர்க்கவும் முற்படுகிறார்கள். அதனால் 8, 9 உத்தேச எதிர்மனுதாரர்களை அசல் தாவாவில் எதிர் தரப்பிரனர்களாக சேர்க்க வேண்டும் என்று மனுதாரர்/வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டு, மனுப்படி உத்தரவாக மனுதாரர் /வாதி பிரார்த்தித்துக்கொள்கிறார்.

3. உத்தேச எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் –

மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவில் உள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது. சட்டத்திற்கு முரணானது. திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், ஆராசூர் கிராமத்தில் சர்வே எண். 477/1B, 476/1 –ல் உள்ள சொத்துக்களை கடந்த 22.03.2013 அன்று ஒரு பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் 1–ஆம் பிரதிவாதியிடமிருந்து தகுந்த மறுபயன் செலுத்தி 3–ஆம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார். அதன் பின்னர் 2016–ஆம் ஆண்டில் மனுதாரர்/வாதி மேற்படி தவறான ஒரு அசல் வழக்கை தாக்கல் செய்து எதிர்மனுதாரர்களை அலைக்கழித்து வந்தார். 3–ஆம் பிரதிவாதி 8–ஆம் உத்தேச எதிர்மனுதாரருக்கு சொத்தை செட்டில்மெண்ட் செய்துவைக்க எண்ணி, 7–ஆம் பிரதிவாதியின் அலுவலகத்தை அணுகி அவணத்தை

முன்னிட்டபோது, மேற்படி அசல் வழக்கு நிலுவையில் இருந்ததால், 7–ஆம் பிரதிவாதி ஆவணத்தை பதிவு செய்ய மறுத்துவிட்டார். இந்நிலையில் 3–ஆம் எதிர்மனுதாரர்/3 ஆம் பிரதிவாதி மாண்பமை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து 8–ஆம் உத்தேச பிரதிவாதிக்கு சொத்துக்களை தான செட்டில்மெண்ட் செய்வதை 7–ஆம் பிரதிவாதி பதிவு செய்யவேண்டுமென்று உத்தரவிடக் கோரி அம்மனு மாண்பமை உயர் நீதிமன்றத்தால் W.P.No.32914/2022–ல் கடந்த 08.12.2022 அன்று அனுமதிக்கப்பட்டு, அந்த உத்தரவின் அடிப்படையிலேயே 8–ஆம் உத்தேச எதிர்மனுதாரர் பெயருக்கு செட்டில்மெண்ட் பத்திரம் கடந்த 06.06.2023 அன்று 3–ஆம் பிரதிவாதியால் எழுதி பதிவு செய்யப்பட்டது. அதன் பிறகே 8–ஆம் உத்தேச எதிர்மனுதாரர், 9 ஆம் உத்தேச எதிர்மனுதாரருக்கு விற்பனை செய்து கிரைய ஆவண பத்திர பதிவு செய்யப்பட்டது. எனவே, உரிய சட்ட விதிமுறைகளை பின்பற்றித்தான் மற்றும் மாண்பமை உயர்நீதிமன்றத்தின் உத்தரவை பெற்ற பின்புதான் மேற்படி பாராதீனங்கள் செய்யப்பட்டது. எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல. அதனால் மேற்படி மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுமாறு உத்தேச எதிர்மனுதாரர்கள் பிரார்த்தித்துக்கொள்கிறார்கள்.

4. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனு மற்றும் உத்தேச எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரை ஆகியவற்றை நன்கு பரிசீலனை செய்ததில், இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கப்படதக்கதா அல்லது தள்ளுபடி செய்யத்தக்கதா? என்பதாகும்.

<u>தீர்வு –</u>

5. இம்மனுவானது மனுதாரர்/வாதியால் 8 மற்றும் 9 உத்தேச எதிர்மனுதார்களை அசல் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க அனுமதிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதற்கு வாதியால் குறிப்பிடப்பட்டுள்ள காரணமானது வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் 3–ஆம் பிரதிவாதி தாவா 7 மற்றும் 8 ஐட்ட சொத்துக்களை அவரது கணவரான 8–ஆம் உத்தேச எதிர்மனுதாரருக்கு ஒப்படைவு ஆவணம் எழுதி பதிவு செய்துள்ளதாகவும், மேலும், 8–ஆம் உத்தேச எதிர்மனுதாரர் மேற்படி ஐட்ட சொத்துக்களை 9–வது உத்தேச எதிர்மனுதாரருக்கு கிரையம் செய்துவிட்டதாகவும், எனவே, மேற்படி 8 மற்றும் 9 உத்தேச எதிர்மனுதாரர்கள் வருவாய் ஆவணங்களில் அவர்களது பெயர்களை சேர்க்கவும், தாவா சொத்துக்களில் வாதியின் அனுபவத்தை தடை செய்யவும் முயன்று வருவதாகவும், எனவே அவர்களை அசல் வழக்கில்

பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

6. உத்தேச எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவை பெற்ற பின்புதான் அந்த உத்தரவிற்கிணங்க, 3–ஆம் பிரதிவாதி 8–ஆம் உத்தேச எதிர்மனுதாரருக்கு செட்டில்மெண்ட் ஆவணத்தை இந்த வழக்கு நிலுவையிலிருந்தபோது கடந்த 06.06.2023 அன்று எழுதி பதிவு செய்து கொடுத்தார் என்றும், அதன் பின்புதான் 9–வது உத்தேச எதிர்மனுதாரருக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டது என்றும், மேற்படி நடைமுறைகளில் சட்டத்திற்கு முரணான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்றும், எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு, மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டிக்கொள்ளப்பட்டது.

7. இருதரப்பு வாதங்களையும், வழக்காவணங்களையும் பரிசீலனை செய்ததில், அசல் வழக்கின் அட்டவணை சொத்துக்களில், 7 மற்றும் 8–வது ஐட்ட சொத்துக்களை 3–ஆம் பிரதிவாதி மேற்படி அசல் வழக்கு நிலுவையில் இருந்தபோதுதான், 8–ஆம் உத்தேச எதிர்மனுதாரருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்பதையும், அதன் பின்பு 8–ஆம் உத்தேச எதிர்மனுதாரர் 9–ஆம் உத்தேச எதிர் மனுதாரருக்கு கிரையம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்பதையும் அறிய முடிகிறது. மாண்பமை மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் உத்தரவை பெற்றுதான் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணமானது 3 –ஆம் பிரதிவாதியால் ஏற்படுத்தப்பட்டது என்றாலும், அதன் பின்பு 8–ஆம் உத்தேச எதிர்மனுதாரர் 9–வது உத்தேச எதிர்மனுதாரருக்கு ஒரு கிரைய ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

8. எனவே, அசல் வழக்கு நிலுவையில் இருந்துள்ளபோது, அந்த வழக்கின் அட்டவணை சொத்துக்களில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் குறித்து பாராதீனம் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், அவ்வாறு சொத்துக்களை பாராதீனம் பெற்றவர்கள் பின்னாளில் தங்களுக்கு தாவா நிலுவையில் இருந்த சங்கதி தெரியாது என்று குறிப்பிட்டு அந்த சொத்துக்கள் குறித்து தனியாக ஒரு வழக்கு தொடுக்கவும் வாய்ப்புள்ளது. அவ்வாறன நேர்வானது ஒரே சொத்து குறித்து பல்வேறு வழக்கு வியாஜியங்கள் ஏற்படுவதற்கு வழிவகுத்துவிடும். எனவே,

அசல் வழக்கின் அட்டவணை சொத்துக்களை குறித்து இறுதியாக முடிவு செய்ய மேற்படி சொத்துக்களை பாராதீனம் பெற்ற நபர்களின் தரப்பையும் கேட்டு முடிவு செய்யும்போது, தாவா பிரச்சனை குறித்து ஒரு முழுமையான தீர்வை எட்ட முடியும் (Issues can be decided comprehensively by deciding all the factor by hearing all the parties). மேலும், 8 மற்றும் 9 உத்தேச எதிர்மனுதார்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்ப்பதன் மூலம் அவர்களுக்கு எந்தவித தீங்கும் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை ( No prejudice will be caused to the expected defendants 8 and 9). மாறாக அவர்களை பிரதிவாதிகளாக சேர்ப்பதன் மூலமாக மேற்படி தாவாவிற்கு ஒரு முழுமையான தீர்வை எட்ட முடியும் என்பதால், மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக மேலே குறிப்பிட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

2025 ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 20 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி(மு.கூ.பொ)

<u>மனுதாரர் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள்</u> – இல்லை
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள்</u> – இல்லை

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி(மு.கூ.பொ)